**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.892/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | வீரபாண்டியன் |
| Father's Name/Husband Name: | புருசோத்தமன் |
| Village : | காரியானூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 42 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 24.08.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 3 மற்றும் 4 ஆஜர். எதிரிகள் 1, 2, 5, 6 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 சுதா என்னுடைய மனைவி என்றால் சரிதான். நான் எனது மனைவியுடன் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றேனா என்றால் 2 முறை சென்றேன். புகார் யார் எழுதினார்கள் என்றால் நாங்கள் சொல்லச் சொல்ல ஒருவர் எழுதினார். புகாரை டைப் செய்து கொடுத்தோமா அல்லது கையால் எழுதினார்களா என்றால் கையால் எழுதினார். புகார் டைப் செய்திருந்தால் அது தவறா என்றால் டைப் செய்யவில்லை. புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு இப்பொழுது நினைவில்லை என்றால் சரியல்ல சண்டை குறித்து எழுதியுள்ளோம்.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வயல் மேடான பகுதியில் உள்ளது. நான் வேலை செய்து கொண்டிருந்த பகுதி அதைவிட கொஞ்சம் தாழ்வான பகுதியாகும்.

எதிரிகள் வெங்கடேசன் மற்றும் செல்வம் ஆகியோர் எனக்கு அண்ணன் தம்பி உறவுமுறை என்றால் சரிதான்.

மேற்கண்ட எதிரிகள் என்னிடம் பணிவாக அண்ணா உங்கள் மரம் தாழ்வாக உள்ளதால் எங்கள் நிலத்தில் நிழல் பட்டு பாதிப்பு ஏற்படுகிறது எனவே மரத்தை வெட்டி விடுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். நானும் எதிரிகளிடம் காட்டிற்கு பாதிப்பு உள்ளதால் வெட்டிக் கொள்ளுங்கள் என்று தன்மையாக கூறி பேச்சை முடித்துக் கொண்டோம் என்றால் சரிதான். பின்னர் எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது அக்கம் பக்கத்தினர் தகராறு வேண்டாமென்றும் உங்களுக்குள் அனுசரித்து போங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான்.

என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல ஒரு முறை செல்லியம்மன் கோவிலில் வைத்து விசாரித்தார்கள். அப்போது நானும் எனது மனைவியும் எதிரி குடும்பத்தை சார்ந்தவர்களும் அவர்களின் உறவினர்களும் அங்கு வந்திருந்தார்கள் என்றால் சரிதான். கோவிலில் வைத்து போலிசார் இரு குடும்பத்தாரர்களிடமும் பிரச்சனை வேண்டாமென்றும் இது சாதாரண விசயம் என்று சொன்னார்கள் என்றால் சரிதான்.

எதிரி செல்வம் 2022ம் ஆண்டில் வெளிநாடு எப்போது சென்றார் என்றால் எனக்கு தெரியாது. பின்பு எதிரி செல்வம் வெளிநாடு சென்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் வெளிநாடு செல்லவில்லை. 11.07.2022ம் தேதி எதிரி செல்வம் ஊரில் இல்லை என்றாலும் அப்போது அவர் பயிற்சிக்காக சென்னை சென்றிருந்தாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எனது மனைவி மற்றும் எதிரிகளின் சத்தம் கேட்டு நான் ஓடிவந்து பார்த்தேன் என்றால் சரிதான். என்னுடன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் சத்தம் கேட்டு ஓடிவந்தார்கள் என்றால் சரியல்ல. நான் ஓடிவந்து பார்க்கும்போது எனது மனைவி கீழே கிடந்தார் என்றால் சரிதான், மயக்கநிலையில் இருந்தார். சத்தம் கேட்டு மற்ற நபர்களும் அங்கு ஓடிவந்தார்கள் என்றால் சரிதான்.

பின்னர் எனது மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எதிரி தனலெட்சுமியின் கையில் காயம் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. அவர் மருத்துவமனைக்கு

சிகிச்சைக்கு நான் வந்ததை நான் பார்த்தேனா என்றால் தெரியவில்லை. எனது மனைவி மயக்கநிலையில் கீழே கிடந்ததை பார்த்து நான் யாரிடமும் பேசாமல் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து எனது மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதே சமயத்தில் எதிரிகளும் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

எனது மனைவி எதிரி மகாலெட்சுமியிடம் தேவையில்லாமல் தகராறு செய்து அவருடைய வலது கையை கிழித்துவிட்டு அவராகவே நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. என்ன விவரம் என்று தெரியாமல் கீழே கிடந்த எனது மனைவியை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரி மாதேஷ்வரன் குடும்பத்திற்கும் பாதை சம்மந்தமான உரிமையியல் வழக்கு வேப்பந்தட்டை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரி மாதேஷ்வரனும் மற்ற எதிரிகளும் நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். மேற்கண்ட உரிமையியல் வழக்கிற்கு மற்ற எதிரிகள் எதிரி மாதேஷ்வரனுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் எதிரிகள் பாதை சம்மந்தமான பிரச்சனையில் எதிரி மாதேஷ்வரனுக்கு ஆதரவாக இருந்ததால் தான் எனது மனைவி மூலம் அவர்களுக்கெதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல மற்ற எதிரிகள் மேற்கண்ட பாதை சம்மந்தமான பிரச்சனைக்கு வரவேயில்லை.

நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் எனது மனைவியை குச்சியாலும், கையாலும், கம்பாலும் மற்றும் கொடுவாளாலும் அடிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.